# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் (திருத்தம்)

***2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணைப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, யூலை மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, மே மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***274 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தைத் திருத்துகின்தென்பதுடன் திருத்தப்பட்டவாறாக இத்திருத்தத்தின் சட்டப்பயனாவது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் "வர்த்தக பணிப்பாளர் தலைமையதிபதி," மற்றும் "வர்த்தக திணைக்களம்" என்பவற்றின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை முறையே "சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்" என்பவரினாலும் மற்றும் சர்வதேச வியாபாரத்திற்கான அலுவலகம்" என்பதனாலும் பிரயோகிக்கபடுதலும், புரியப்படுதலும் மற்றும் நிறைவேற்றப்படுதலும் வேண்டுமென ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் இத்திருத்தமானது 2 ஆம் வாசகத்திற்கு செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையானதாகும்.

*மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் (திருத்தம்)*

*ச.வ.- ஓ. 45/2024*

**2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்திற்கான திருத்தம்*

**2.** (1) (இதனகத்துப்பின்னர், “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப் பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தில் “பணிப்பாளர் தலைமையதிபதி” மற்றும் “திணைக்களம்” என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முறையே “செயலாளர்” மற்றும் “சவிஅ” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் அறிவிப்பு, அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்தில் “வர்த்தக பணிப்பாளர் தலைமையதிபதி” மற்றும் “வர்த்தக திணைக்களம்” என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முறையே, “சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்” மற்றும் “சர்வதேச வியாபார அலுவலகம்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “திணைக்களம்” மற்றும் “பணிப்பாளர் தலைமையதிபதி” என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும்;

(2) ''அமைச்சர்'' என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக:-

'' ''அமைச்சர்'' என்பது சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;'';

(3) ''செயற்படத்தகாத மானியம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலமும்:-

'' ''சவிஅ'' என்பது, 2024 ஆம் ஆண்டின் பொருளாதார நிலைமாற்றச் சட்டத்தின் 99 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேச வியாபார அலுவலகம் எனப் பொருள்படும்;''; அத்துடன்

(4) ''தற்காலிக வழிமுறைகள்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலமும்:-

'' ''செயலாளர்'' என்பது சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எனப் பொருள்படும்;''.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.